விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 241 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 01 புதன்கிழமை (17.08.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## அம்பாந்தோட்டையில்
### சர்ச்சைக்குரிய சீனக் கப்பல்






சரத் வீரசேகரவுக்கு கைகொடுக்க மறுத்த சீன கப்டன்

3ஆம் பக்கம் பார்க்க

## ஆட்சிக் கவிழ்ப்பை
### சீனா மேற்கொள்ளவில்லை
சீன கப்பல் வரவேற்புரையில் விமல் வீரவன்ஸ

(அம்பாந்தோட்டை)
இலங்கையில் தொண்டு நிறுவனங்களை நிறுவி ஆட்சிக் கவிழ்ப்புக்களை மேற்கொள்ள சீனா ஒருபோதும் முற்பட்டதில்லை என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான விமல் வீரவன்ஸ எம்.பி. தெரிவித்தார்.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு நேற்றுக் காலை வருகை தந்த சீன இராணுவத்தின் 11

இந்தியாவின் தேவைக்காக
## இலங்கை கொள்கையை மாற்றியமைக்க முடியாது
கப்பல் வரவேற்பில் சரத் வீரசேகர

(அம்பாந்தோட்டை)
இந்தியாவின் தேவைக்காக இலங்கையின் வெளிவிவகார கொள்கையை மாற்றியமைக்க முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

மேலும் சீனா இலங்கைக்கு தவிர்க்க முடியாத - நம்பகமான ஒரு நண்பன் என சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வருகை தந்துள்ள யுவான் வாங் - 5 கப்பலின் வர 11

இலங்கை வந்த சீன கப்பல்
## தீவிர கண்காணிப்பில் இந்தியக் கடற்படை

(கொழும்பு)
இந்தியாவின் கடும் எதிர்ப்பை மீறி சீன உளவுக் கப்பல் "யுவான் வாங் 5" நேற்று இலங்கையை வந்தடைந்துள்ள நிலையில், தமிழகத்தில் தனுஷ்கோடி முதல் தொண்டி வரையிலான இந்திய எல்லைக்குட்பட்ட ஆழ்கடல் பகுதியில் இந்திய கடற்படையினர் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றதாக கூறப்படுகின்றது.

நேற்றுச் செவ்வாய்கிழமை அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வந்த சீன உளவுக் கப்பல் 11

யாழ்.போதனாவில்
## கொரோனாவால் பெண் மரணம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் கோவிட் - 19 நோய்த் தொற்று காரணமாக வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். 11

நாட்டின் நிலைமை சுமூகம்
# அவசரகாலச் சட்டம் இவ்வாரம் நீக்கப்படும்
ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)
நாட்டின் நிலைமை சமூகம் அடைந்துள்ளதால் இலங்கையில் தற்போது அமுலில் உள்ள அவசரகாலச் சட்டத்தை இந்த வார இறுதிக்குள் நீக்க முடியும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை வெளியிட்டார். (11ஆம் பக்கம் பார்க்க)

திருநெல்வேலியில்
## இளைஞர் ஒருவர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)
திருநெல்வேலி பாற்பண்ணைப் பகுதியில் இளைஞர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கோப்பாய் தெற்கைச் சேர்ந்த பாலசுப்பிரமணி ஐயா கணனாதசர்மா (வயது-34) 11

இலங்கை வந்தடைந்தார்
## ஐ.நா அதிகாரி
எதிர்வரும் நாட்களில் யாழுக்கும் விஜயம் செய்வார்

(கொழும்பு)
ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி ஒருங்கிணைப்பு அலுவலகத்தின் (UNDCO) ஆசிய - பசிபிக் பிராந்திய பணிப்பாளர் 11

கொரோனா
## +6 மரணம்
## +195 தொற்று

(கொழும்பு)
நாட்டில் மேலும் 6 பேர் கோவிட்-19 தொற்றினால் மரணித்துள்ளனர்.

60 வயதிற்கு மேற் 11

இலங்கையின் 75ஆவது சுதந்திர தினத்தில்
## தமிழ் மொழியிலும் தேசிய கீதம் இசைக்கப்படும்
அமைச்சர் பந்துல குணவர்த்தன

(கொழும்பு)
இலங்கையின் தேசிய சுதந்திர தின விழாவில் தேசிய கீதத்தை தமிழிலும் பாடுவதற்கு அர சாங்கம் அனுமதி அளித்துள்ளது என அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள் 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்ணெண்ணை பிரச்சினைக்கு இந்த வார இறுதியில் தீர்வு

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா



(கிளிநொச்சி)

கடற்தொழிலாளர் எதிர் கொள்ளும் மண்ணெண்ணை பிரச்சினைக்கு இந்தவார இறுதியிலிருந்து தீர்வு கிடைக்கும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று இடம் பெற்ற கலந்துரையாடல் ஒன்றின் பின்னர் ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளரால் எழுப்பப் பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஏற்கனவே பல்வேறு பாதிப்புக்களையும், பொருளாதாரத்தினாலும் பாதிக்கப்பட்டுள்ள மக்கள், கடல்சார் உணவினை பெற்றுக்கொள்ள முடியாத அளவிற்கு விலை அதிகரித்து காணப்படுவது தொடர்பில் அமைச்சரிடம் வினவப்பட்டது. அதற்கு பதிலளித்த அமைச்சர்,

இந்த பிரச்சினை இருப்பது உண்மைதான். இந்த நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டதனால் எமது மக்கள் அதிகளவான பிரச்சினைகளை எதிர்கொள்கின்றார்கள். அதற்கு தீர்வு காணும் வகையில் எரிபொருளை தாராளமாக கிடைக்கக் கூடிய ஏற்பாடுகளும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

குறிப்பாக கடற்தொழிலாளர்களை பொறுத்தவரையில், சிறு கடற்தொழிலாளர்களிற்கு மண்ணெண்ணை ஒரு தட்டுப்பாடாக இருக்கின்றது. அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு தனியாரால் மண்ணெண்ணை இறக்கப்படுவது தொடர்பில் தற்போது உள்ள நிலை தொடர்பில் கலந்துரையாடியுள்ளேன்.

அதேவேளை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தபனமும் மசகு எண்ணையை வடித்து மண்ணெண்ணையாக விநியோகிப்பதற்கான நடவடிக்கையும் நடைபெற்றக்கொண்டிருக்கின்றது. இந்த வார இறுதியில் கைகூடும் என்று நம்புகின்றேன் என்றார். (ம-7)

# போதை மாத்திரைகளுடன் கோண்டாவிலில் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோண்டாவில் பகுதியில் ஒரு தொகை போதை மாத்திரைகள் மற்றும் போதை மாத்திரைகளை விற்பனை செய்தன் ஊடாக பெற்றுக்கொண்ட பணம் என்வற்றுடன் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோண்டாவில் வீரபத்திரர் கோவிலை அண்டிய பகுதியில் இளைஞன் ஒருவர் போதை மாத்திரை விற்பனையில் ஈடுபடுவதாக கோப்பாய் பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்தது.

தகவலின் பிரகாரம் அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார், போதை மாத்திரை விற்பனை செய்தார் எனும் குற்றசாட்டில் 23 வயதான இளைஞனை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்த வேளை அவரது உடைமையில் இருந்து ஒரு தொகை போதை மாத்திரை, அவற்றை விற்பனை செய்ததன் மூலம் பெற்றுக்கொண்ட பணம் என்பவற்றை மீட்டனர்.

அதனை அடுத்து, கைது செய்யப்பட்ட இளைஞனை கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)

# மேலும் ஒரு எரிவாயுக் கப்பல் நாட்டை வந்தடைந்தது

(கொழும்பு)

3,120 மெற்றிக் தொன் எரிவாயுவை ஏற்றி வந்த கப்பல் ஒன்று நேற்று காலை அம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்துள்ளதாக லாஃப்வ் எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி, தற்போது எரிவாயு இறக்கப்பட்டு வருவதாக லாஃப்ஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேலும் எரிவாயு நிரப்பும் பணி ஆரம்பித்தவுடன் வாடிக்கையாளர்கள் கொள்வனவு செய்யும் வகையில் மொத்த சந்தைக்கு எரிவாயு விநியோகிக்கப்படும் என சம்பந்தப்பட்ட நிறுவனம் தெரிவித்துள்ளது. (ம-7)



# 31ஆம் நாள் நினைவஞ்சலி



எமது பாடசாலையின் சக ஆசிரியை
திருமதி **ருஷானி** அவர்களின் அன்புத் தாயார்

அமரர் **தங்கராசா கணேஸ்வரி**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
31ஆம் நாளில் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் கழகம்**
**யா / நடராஜ இராமலிங்க வித்தியாலயம், ஆவரங்கால்**

(12463)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

## கலைமாணிப்பட்டப்படிப்பு (வெளிவாரி)

முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சை - 2016
அணி - I மற்றும் அணி II மாணவர்களுக்கானது

மேற்படி பரீட்சைகளானது எதிர்வரும் புரட்டாதி மாதமளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளன. பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியான மாணவர்கள் (முதற்தடவை தோற்றுவோர் மற்றும் மீள் பரீட்சார்த்திகள்) பரீட்சைக்கான விண்ணப்ப படிவத்தினை எதிர்வரும் **18.08.2022 (வியாழக்கிழமை) தொடக்கம் 21.08.2022 (ஞாயிற்றுக் கிழமை) வரை அலுவலக நாட்களில் (காலை 09.30 மணி தொடக்கம் மாலை 03.00 மணி வரை) அத்துடன் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் (காலை 09.00 மணி தொடக்கம் மதியம் 01.00 மணி வரை)** திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் பூர்த்தியாக்கப்பட்ட விண்ணப்ப படிவத்தினை **21.08.2022 மதியம் 01.00 மணிக்கு முன்னராக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் நேரடியாக சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.** மேலும் பரீட்சை அனுமதி அட்டை வழங்குதல் மற்றும் பரீட்சை நேர அட்டவணை தொடர்பான விபரங்கள் மிகவிரைவில் அறியத்தரப்படும்.

**பதிவாளர்**
**16.08.2022**

(C-4746)

# கேள்வி அறிவித்தல்

## சபைநிதி வேலைத்திட்டம் - 2022

### வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்

01. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை ,மானிப்பபாய் அவர்களினால் தகுதிவாய்ந்த வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணைகளில் விபரிக்கப்பட்டவாறான பொருட்களை பெறுவதற்காக கோரப்படுகின்றது.

02. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், உரிய வியாபார பதிவினை கொண்டவராகவும் அல்லது CIDA தர பதிவுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

03. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வி ஆவணமொன்றை வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை மானிப்பாய் எனும் இடத்திலிருந்து **16.08.2022** திகதியிலிருந்து **29.08.2022**ஆம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் பி.ப 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக **ரூபா. 1000.00 ஐ** (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.

04. பூர்த்தி செய்யபட்ட கேள்வி ஆவணங்கள் மற்றும் அட்டவணையில் காட்டப்பட்டவாறு கேள்விப்பிணைத்தொகையினை பணமாக செலுத்தி, பற்றுச்சீட்டினையும் இணைத்து **30.08.2022**ஆம் திகதி பி.ப 02.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு **தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்** எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். கடித உறையில் இடதுபக்க மேல்மூலையில் கேள்வி விபரம் குறிப்பிடப்படவேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்தவுடன் வருகைதரும் கேள்வித்ரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

05. கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை தலைமையலுவலகத்தில் (தொலைபேசி **021 225 5381**) இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**அட்டவணை - I**

| தொஇல | விபரம் | தேவைப்படும் எண்ணிக்கை | கேள்விப் பிணை வைப்பு (இத்தொகை பணமாக செலுத்தப்படவேண்டும்) |
|---|---|---|---|
| 01 | 4" Granitite Metal with Piling | 4M3 | 5000.00 |
| 02 | 2" Granitite Metal with Piling | 8M3 | |
| 03 | ¾ " Granitite Metal with Piling | 8M3 | |
| 04 | ½ " Granitite Metal with Piling | 16M3 | |
| 05 | Bitumen ( 80/100)-(180 Liter Barrel) | 10Barrel | 5000.00 |
| 07 | Vibrating roller(1/2 ton) with Operator and Fuel | 07 Days | 3000.00 |
| 08 | Fire Wood (விறகு வேம்பு,பூவரசு,வீரை,இலுப்பை,நாவல்) | 300Kg | 1000.00 |
| 09 | River Sand with Piling | 8M3 | 3000.00 |

**அ.ஜெபநேசன்,**
தலைவர், பெறுகைக்குழு,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.

(C-4747)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புலம்பெயர் அமைப்புகளின் தடைநீக்கம் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல்

### அரசின் ஏமாற்று வேலைக்கு சர்வதேசம் பலிக்கடாவாகப் போகிறது என்கிறார் பொன்சேகா

(கொழும்பு)

"தேசியப் பாதுகாப்புத் தொடர்பில் கவனம் செலுத்தாமல் சர்வதேசத்தை ஏமாற்றுவதற்காகவும் ஜெனிவா மாநாட்டைச் சமாளிக்கவுமே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புலம்பெயர் அமைப்புகளுக்கான தடை நீக்கம் என்ற இந்த நாடகத்தை அரங்கேற்றியுள்ளார். அவரின் இந்த ஏமாற்று நாடகத்துக்கு சர்வதேசமும் பலியாகப்போகின்றது" என முன்னாள் இராணுவத் தளபதியும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார். புலம்பெயர் அமைப்புகள் மீதான தடை நீக்கம் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

"ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினரை ஏமாற்றி பிரதமர் பதவியை சுவீகரித்து பின்னர் ஜனாதிபதியாகிய ரணில், முழு பாராளுமன்றத்தையும் ஏமாற்றி, நாட்டு மக்களையும் முட்டாளாக்கி இன்று சர்வதேசத்தையும் முட்டாளாக்கும் கைங்கரியத்தில் ஈடுபட்டுள்ளார்.

தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருந்தமையால் தான் தடைப்பட்டியலில் புலம்பெயர் தமிழ் அமைப்புகளும் அடையாளம் காணப்பட்ட தனிநபர்களும் சேர்க்கப்பட்டனர். இந்தநிலையில் யார் மூலம் காய்களை நகர்த்தி சர்வதேசத்தை ஏமாற்ற முடியுமோ அந்த அமைப்புகளையும் குறிப்பிட்ட நபர்கள் மீதான தடையையும் ஜனாதிபதி நீக்கியுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியிலும் நாட்டின் ஜனாதிபதி என்ற ரீதியிலும் இது தொடர்பில் பாராளுமன்றத்துக்கும் நாட்டு மக்களுக்கும் விரிவான விளக்கத்தை அவர் வழங்க வேண்டும்" என அவர் தெரிவித்தார். (நி)

## கடந்த 4 மாதங்களுடன் ஒப்பிடுகையில் கொரோனாத் தொற்றாளர்கள் 10 மடங்காக அதிகரிப்பு

(கொழும்பு)

**கடந்த 4 மாதங்களை விடவும் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கை 10 மடங்கு அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.**

இந்த சூழலில் சுகாதார வழிமுறைகளை கடுமையாக பின்பற்ற வேண்டும் என பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

129 கொவிட் தொற்றாளர்கள் நேற்று முன்தினம் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், மொத்த கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை 668,141 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று முன்தினம் 3 கொரோனா மரணங்கள் பதிவாகிய நிலையில், கொவிட் மரணங்களின்



எண்ணிக்கை 16,624 ஆக அதிகரித்துள்ளது. (நி)

## இடைக்கால பட்ஜெட் மாத இறுதியில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

இந்த வருடத்தின் மீதமான நான்கு மாதங்களுக்கான இடைக்கால வரவு செலவுத் திட்டம் இம்மாதம் 30 ஆம் திகதி நிதி, திட்டமிடல் அமைச்சரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை மேற்படி இடைக்கால வரவுசெலவுத் திட்டம் தொடர்பில் அரசாங்கத்தின் செலவினம் உள்ளிட்ட 30 ஆம் இலக்க குறைநிரப்பு பிரேரணை கடந்த 9 ஆம் திகதி பிரதமர் தினேஷ் குணவர்தனவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அந்த குறைநிரப்பு பிரேரணையில் 3275 பில்லியன் ரூபா அரச செலவினமாகவும் ஜனாதிபதி, பிரதமர் மற்றும் ஏனைய அமைச்சுக்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி தொடர்பிலும் அந்த குறைநிரப்பு பிரேரணையில் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

## பிஸ்கட் விலைகளும் எகிறியது

(கொழும்பு)

தமது உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் விசேட கோதுமை மாவின் விலைகள் அதிகரித்துள்ளதன் காரணமாக பிஸ்கட்டுக்களின் விலைகளை அதிகரிக்க நேரிட்டுள்ளதாக இலங்கை இனிப்புப் பண்டங்கள் உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. தங்களது உற்பத்திப்பொருட்களுக்காக பயன்படுத்தப்படும் கோதுமைமாவின் விலைகள் அதிகரித்துள்ளதால், தங்களது உற்பத்திப்பொருட்களுக்கான விலைகளும் அதிகரித்துள்ளதாக இலங்கை இனிப்புப் பண்டங்கள் உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (நி)

## அம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடைந்தது சீனக்கப்பல்



(கொழும்பு)

சீனாவின் செயற்கைக் கோள் கண்காணிப்பு கப்பலான "யுவான் வாங்-5" பெரும் சர்ச்சைகளின் பின்னர் நேற்று செவ்வாய்க்கிழமை காலை அம்பாந்தோட்டை துறைமுகத்துக்குள் நுழைந்தது.

இலங்கை கடல் எல்லைக்குள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இந்தப் கப்பல் உத்தியோகபூர்வமாக நுழைந்தது.

தொடர்ந்து அம்பாந்தோட்டை துறைமுகத்துக்குள் வந்து சேர்ந்த இந்தக் கப்பல் அடுத்த 22 ஆம் திகதி வரை அங்கு தரித்துநிற்கும்.

சீன செயற்கைக்கோள் கண் காணிப்பு கப்பலான யுவான் வாங் -5 அம்பாந்தோட்டை துறைமுகத்தில் நிறுத்துவத ற்கு இலங்கை வெளியுறவுத் துறை கடந்த சனிக்கிழமை அனுமதி வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (நி)

## அனைத்து பல்கலைக்கழகங்களையும் மீள ஆரம்பிக்க நடவடிக்கை

### பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து பல்கலைக்கழகங்களையும் விரைவில் மீள ஆரம்பிப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு எதிர்பார்த்துள்ளது.

இது தொடர்பில் தீர்மானிப்பதற்காக எதிர்வரும் திங்கட்கிழமை அனைத்து உப வேந்தர்களும் அழைக்கப்பட்டுள்ளதாக, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர், பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

குறித்த கலந்துரையாடலின் பின்னர் பல்கலைக்கழகங்களை மீள ஆரம்பிப்பது குறித்து தீர்மானிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

## எரிபொருள் விலைகளில் இனி மாற்றம் இல்லை?

(கொழும்பு)

விலைச் சூத்திரத்தின் அடிப்படையில் எரிபொருள் விலைகளில் எந்தவொரு மாற்றத்தினையும் ஏற்படுத்தாதிருக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக த்கவல்கள் வெளியாகியுள்ளன.

ஒவ்வொரு மாதமும் முதலாம் மற்றும் 15 ஆம் திகதிகளில் எரிபொருள் விலைகளில் திருத்தம் மேற்கொள்ளப்படுமென மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்திருந்தார்.

இதற்கமைய, எரிபொருள் விலை திருத்தம் நேற்று முன்தினம் இரவு மேற்கொள்ளப்படுமென எதிர்பார்க்கப்பட்ட போதும் இந்த் விடயம் தொடர்பில் எவ்வித அறிவிப்புகளும் வெளியாகவில்லை. (நி)

## சிறுவர்களிடையே அதிகரிக்கும் கொரோனாத் தொற்று

(கொழும்பு)

இலங்கையில் மீண்டும் கொரோனாத் தொற்று அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ள நிலையில் சிறுவர்கள் தொடர்பில் பெற்றோர்கள் கவனம் செலுத்துமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அரசாங்கத் தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் பிள்ளைகளின் உடல்நிலை குறித்து பெற்றோர் அதிக கவனம் செலுத்த வேண்டும் என மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

தற்போது கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்படுபவர்களுக்கு, முதல் இரண்டு நாட்களில் அதிக காய்ச்சல் காணப்படும். இதனால் விசேடமாக அவ்வாறு காய்ச்சலால் பாதிக்கப்பட்ட பிள்ளைகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று பொரளை ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையின் விசேட மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் பிள்ளைகளில் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்கள் தவிர டெங்கு மற்றும் இன்புளுவன்சா நோயாளர்களும் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், கடந்த வாரத்தில் மூச்சுத் திணறல் நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளதாக அவர் தெரிவித்தார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை கிரிக்கெட் பிரிவு III-2022

# யாழ்.ஜொனியன்ஸ், கே.சி.சி.சி. அணிகள் கால் இறுதிப் போட்டிக்கு தகுதி





இலங்கை கிரிக்கெட்டின் நெறிப்படுத்தலில் யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கம் நடாத்தும் 50 ஓவர் கொண்ட தொடரின் 7 ஆவது காலிறுதிப் போட்டியில் (PRE.QUARTER FINALS VII) யாழ்.ஜொனியன்ஸ் அணி, யாழ்.பல்கலைக்கழக அணியை 49 ஓட்டங்களால் வெற்றி பெற்று காலிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்.பல்கலைக்கழக அணி களத்தடுப்பபை தீர்மானித்த போது, முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்.ஜொனியன்ஸ் அணி 48.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 261 ஓட்டங்களைப் பெற்றது.

பிருந்தாவன்-81, அகிலன்-63, அபிநாஷ்-40, C.P.தனுஜன்-32 ஓட்டங்களைப் பெற்றனர். களத்தடுப்பில் யாழ்.பல்கலைக்கழக அணியைச் சார்ந்த நுவான் திஸநாயக்க 9.2 ஓவர்களில் 67 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் யதூஸன் 9 ஓவர்களில் 34 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் தேனுஜன் 10 ஓவர்களில் 56 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.பல்கலைக்கழக அணி 49.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 212 ஓட்டங்களைப் பெற்றது.

ரயூஸ்ரான்-80, துஜினித்-31, ஜவன்-27 ஓட்டங்களைப் பெற்றனர். களத்தடுப்பில் யாழ்.ஜொனியன்ஸ் அணியைச் சார்ந்த அகிலன் 10 ஓவர்களில் 31 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் லவேந்திரா 10 ஓவர்களில் 22 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் பிருந்தாவன் 10 ஓவர்களில் 30 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் 13 ஆவது ஆண்டாக நடாத்தி வரும் தரவரிசைப் பட்டியலுக்கு யாழ்.ஜொனியன்ஸ் அணி 9.10 புள்ளிகளையும் யாழ். பல்கலைக்கழக அணி 3.12 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன.

அதனைத் தொடர்ந்து 8 ஆவது காலிறுதி முன்போட்டியில் (PRE QUARTER FINAL VIII) கே.சி.சி.சி அணி, டிறைற்றோன் அணியை 180 ஓட்டங்களால் வெற்றி பெற்று காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற கே.சி.சி.சி.அணி முதலில் துடுப்பெடுத்தாடிய போது 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 270 ஓட்டங்களைப் பெற்றது. ஜெயரூபன்-87, சத்யன்-35, யனுதாஸ்-38, சாம்பவன் ஆட்டமிழக்காது 29 ஓட்டங்களைப் பெற்றனர்.

களத்தடுப்பில் டிறைற்றோன் அணியைச் சார்ந்த துவாரகன் 10 ஓவர்களில் 33 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் உதயசாந் 9 ஓவர்களில் 41 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் சாருஜன் 10 ஓவர்களில் 59 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய டிறைற்றோன் அணி 27 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 90 ஓட்டங்களைப் பெற்றது. களத்தடுப்பில் கே.சி. சி.சி அணியைச் சார்ந்த சாம்பவன் 6 ஓவர்களில் 17 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் நிரூசிகன் 7 ஓவர்களில் 15 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் 13 ஆவது ஆண்டாக நடத்தும் தரவரிசைப் பட்டியலுக்கு (RATING) கே.சி.சி.சி அணி 10.50 புள்ளிகளையும் டிறைற்றோன் அணி 1.70 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2689

### நிலானி

அரை மணிநேரம் முன்னாடி தூக்கிட்டு வந்து இருந்தீங்கன்னா இவர் உயிரை காப்பாத்தி இருக்கலாம்.



நீங்க சொல்றது சரிதான் டாக்டர் ஆனா இவர் அடிபட்டு பத்து நிமிடம் தான் ஆச்சு.

### பிரதாபன்




### அர்ச்சகா

கர்ணனைப் போல் நண்பனைத் தேர்ந்தெடு ஆண்டவனே எதிர்த்தாலும் நீ விழுகின்ற நிலை வந்தாலும் உனக்காக உயிரையே தருவான்.



### ஆர்த்தி

இரு கை கூப்பி கடவுளை வணங்குவதை விட ஒரு கை நீட்டி உதவி செய். இரு கை உன்னை வணங்கும் கடவுளாக.

- அன்னை தெரேசா-

### மதுசாலினி

சின்ன வெங்காயம் விலை அதிகம் என்று வாங்குறத நிறுத்தின அப்பாவுக்கு ஸ்கூல் பீஸ் அதிகமாக இருக்குதுன்னு என்னை ஸ்கூல்ல விட்டு நிறுத்தத் தெரியல.



### மதுஜா

உங்கள் எண்ணங்கள் அழகாக இருந்தால் அது உங்களையும் அழகாக்கும்.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெல்லை கொள்வனவு செய்ய எவரும் ஆர்வம் காட்டவில்லை

## வவுனியா விவசாயிகள் கவலை

(நெளுக்குளம்)

**சிறந்த விலை இன்மை மற்றும் நெல்லை கொள்வனவு செய்ய எவரும் ஆர்வம் செலுத்தாமையினால் நெல்லை விற்பனை செய்ய முடியாத நிலை காணப்படுவதாக வவுனியா கொக்குவெளி, பேயாடிகூழாங்குளம், மற்றும் ஒயார்சின்னக்குளம் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.**

இது தொடர்பில் அவர்கள் கருத்து தெரிவிக்கையில், தற்போது சிறுபோக அறுவடை இடம்பெற்றுவரும் நிலையில் ஒரு ஏக்கருக்கு 30 மூடை என்ற ரீதியில் விளைச்சல் கிடைக்கின்றது.

எனினும் நெல் ஆலை உரிமையாளர்களோ வெளிமாட்டங்களில் இருந்தோ நெல்லை கொள்வனவு செய்வதற்கு எவரும் வராத நிலை காணப்படுகின்றது. டீசல் பிரச்சினையே காரணமாக உள்ளது. இதனால் நிர்ணய விலை வவுனியாவில் காணப்படவில்லை.

கடந்த முறை சேதன பசளையினை பயன்படுத்தி



செய்த போதிலும் விளைச்சல் குறைவாக காணப்பட்ட போதிலும் 10 ஆயிரம் ரூபாய் வீதம் ஒரு மூடை விற்பனை செய்திருந்தோம். இம்முறை 40 ஆயிரம் ரூபாவுக்கு இரசாயன பசளை போட்டு செய்கையில் ஈடுபட்ட போதிலும் கொள்வனவாளர்கள் இன்மையால் நல்ல விலை கிடைக்கவில்லை. நெல்லையும் விற்பனை செய்ய முடியாமல் இருக்கின்றது.

அத்துடன் நெல்லை கட்டுவதற்கு பைகள் இல்லை. ஒரு பை 160 ரூபாய் வரையில் விற்கப்படுகின்றது. அதனால் பழைய பைகளையே பயன்படுத்த வேண்டிய நிலை உள்ளது. சணல் ஒரு கிலோ 2000 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுகின்றது.

அதேவேளை நெல்லை விற்பனை செய்ய நெல் ஆலைகளுக்கு கொண்டு சென்றாலும் அவர்கள் நெல் வேண்டாம் என்கின்றார்கள் அதனால் திருப்பி கொண்டு வ-ர வேண்டிய நிலை உள்ளது எனவும் அவர்கள் தெரிவித்தனர். (4-299)

# சட்டவிரோத மீன்பிடி எட்டு மீனவர்கள் கைது

## 6 படகுகள் பறிமுதல்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கடலில் சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட 6 படகுகளும் 8 மீனவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். முல்லைத்தீவு மாவட்ட கடற்பரப்பில் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கை அதிகரித்திருப்பதாகவும் இதனை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவில்லை என மீனவர்கள் தொடர்ச்சியாக குற்றச்சாட்டுக்கள் முன்வைத்து வரும் நிலை யில் அதனை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் கொழும்பில் இருந்து வருகைதந்த விசேட அணியும் முல்லைத்தீவு மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளும் கடற்படையும் இணைந்து நேற்று முன்தினம் இரவு ஈடுபட்டனர். இதன்போது முல்லைத்தீவு கடலில் தடைசெய்யப்பட்ட கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்ட 8 மீனவர்கள் கைது செய்யப்பட்டதோடு 6 படகுகளும் கைப்பற்றப்பட்டன.

கைதுசெய்யப்பட்ட நபர்களையும் சான்றுப் பொருட்களையும் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தும் நடவடிக்கையில் கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர். (4)

# அத்தியாவசிய சேவையில் ஈடுபடும் பாரவூர்திகளுக்கு எரிபொருள் நிரப்ப விசேட நிரப்பு நிலையம்


(சாவகச்சேரி)

யாழ். மாவட்டத்திற்கான அத்தியாவசிய சேவையில் ஈடுபட்டு வருகின்ற பாரவூர்திகளுக்கு தேவையான எரிபொருளை யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலையம் ஊடாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நேற்று செவ்வாய்க்கிழமை யாழ். மாவட்ட செயலகத்தில் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் இடம்பெற்ற அத்தியாவசிய சேவைகள் தொடர்பான மீளாய்வுக் கூட்டத்தின் போதே குறித்த தீர்மானம் எட்டப்பட்டது.

கூட்டத்தில் கலந்துகொண்ட யாழ்ப்பாணம் வர்த்தக கழக பிரதிநிதிகள் கொழும்பிலிருந்து யாழ். மாவட்டத்திற்கான அத்தியாவசியப் பொருட்களை எடுத்து வர வாராந்தம் குறைந்தது 20 பாரவூர்திகள் ஈடுபடுத்தப்படுவதாகவும் அதற்கு தேவையான எரிபொருட்களை கியூ.ஆர் முறையில் பெற்றுக்கொள்ள முடியாத நிலைமை காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இந்நிலையில் வர்த்தக அமைச்சின் பரிந்துரைக்கு அமைவாக யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்க எரிபொருள் நிரப்பு நிலையம் ஊடாக குறித்த அத்தியாவசிய சேவையில் ஈடுபட்டுவரும் பாரவூர்திகளுக்கு தேவையான டீசலை வழங்கி அத்தியாவசியப் பொருட்களை இலகுவாக எடுத்துவர மாவட்ட அபிவிருத்திக் குழுத்தலைவர் அங்கஜன் நடவடிக்கை எடுத்துள்ளார். (4-30)



வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணை மற்றும் வழிகாட்டுதலில் மன்னார் மாவட்டச் செயலகம் மற்றும் மன்னார் மாவட்ட கலை பண்பாட்டு பேரவையும் இணைந்து ஏற்பாடு செய்த திருவள்ளுவர் விழா நேற்று செவ்வாய்க்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது. (படம்: ஜோசப் நயன்)

# பழுதடைந்துள்ள வீதி விளக்குகள் திருத்தப்பட வேண்டும்

## கரைதுறைப்பற்று பிரதேசசபை உறுப்பினர்

(அக்கராயன்)

முல்லைத்தீவு கரைதுறைபற்று பிரதேசசபை எல்லை பரப்பில் பழுதடைந்த வீதி விளக்குகள் திருத்தப்பட வேண்டும் என கரைதுறைபற்று பிரதேச சபை உறுப்பினர் த.அமலன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற சபை அமர்வில் இக்கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர் மேலும் தெரிவித்ததாவது.

நீண்ட காலமாக பழுதடைந்த வீதி விளக்குகள் திருத்தம் செய்யப்படாமல் உள்ளது. இது தொடர்பாக பொதுமக்களினால் முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகின்றன. பிரதேசசபையின் வளங்களைப் பயன்படுத்தி நீண்ட காலமாக திருத்தப்படாமல் உள்ள வீதி விளக்குகள் திருத்தப்பட வேண்டும்.

அத்துடன் புதிய வீதி விளக்குகள் விரைவாக பொருத்தப்பட வேண்டும். பொது மக்கள் செறிந்து வாழும் பகுதிகளிலேயே நீண்ட காலமாக வீதி விளக்குகள் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றன என மேலும் அவர் சுட்டிக்காட்டினார். (4-350)



கரணவாய் மூத்த விநாயகர் ஆலய திருவிழா ஆரம்பமாகி தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த நெல்லிய[illegible] பொலிஸ் பொறுப்பதிகாரி காஞ்சன விமலவீரவிற்கு பிள்ளை[illegible] மாலை அணிவித்து பொன்னாடை போர்த்தினார். (படம்: மகாலிங்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருளை தடையின்றி வழங்கக் கோரி ஆயிரக்கணக்கான மீனவர்கள் திரண்டு முல்லைத்தீவு நகரில் போராட்டம்!

(முல்லைத்தீவு)

**முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் தடையின்றி மானிய விலையில் மண்ணெண்ணெய் வழங்க வேண்டும், இந்திய இழுவைப் படகுகளின் வருகையினை தடை செய்ய வேண்டும், சட்டவிரோத மீன்பிடித் தொழில்கள் அனைத்தும் தடைசெய்ய வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்து முல்லைத்தீவு நகரில் மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றினை முன்னெடுத்தனர்.**



முல்லைத்தீவு மீனவ சம்மேளனத்தினால் நேற்றுக் காலை முல்லைத்தீவு நகரப் பகுதியில் உள்ள புனித இராஜப்பர் ஆலயத்துக்கு அருகில் ஆரம்பமான மாபெரும் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டமானது முல்லைத்தீவு நகரின் ஊடாக பேரணியாகச் சென்று மாவட்ட செயலகத்தை வந்தடைந்தது.

முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் (நிர்வாகம்) மேலதிக அரசாங்க அதிபர் எஸ். குணபாலன் (காணி) மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் ஆகியோரிடம் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை மீனவர்கள் கையளித்தனர்

ஜனாதிபதி, பிரதமர், கடற்றொழில் அமைச்சர் மற்றும் எரிசக்தி அமைச்சர் ஆகியோருக்கு அனுப்பி வைப்பதற்காக கையளிக்கப்பட்ட குறித்த மகஜரையும் தங்களது குறிப்புக்களையும் உள்ளடக்கி உரிய தரப்பினர்களுக்கு அனுப்பி வைப்பதாக முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் மீனவர்களுக்கு தெரிவித்தார். (4)

# பொறியியல் மாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின். கிளிநொச்சி அறிவியல் நகர் பொறியியல் பீட வளாகத்தின் முதலாவது பொறியியல் மாநாடு நாளை மறுதினம் 19 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அந்தவகையில் 9 நாடுகளைச் சேர்ந்த விஞ்ஞானிகள், ஆய்வாளர்கள் பங்கேற்று தங்களது ஆய்வுகளை சமர்பிக்கவுள்ளனர் என பொறியியல் பீட பேராசிரியர் அ.அற்புதராஜா தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சியில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த பொறியியல் மாநாடு பல தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களின் ஆதரவோடு இடம்பெறுகிறது. யாழ். பல்கலைகழகத்தின் கிளிநொச்சி பொறியியல் பீடத்தின் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் அமெரிக்கா, அவுஸ்திரேலியா, பிரித்தானியா, கனடா, சீனா, ஹொங்கொங், உள்ளிட்ட பல நாடுகளிலிருந்து வருகின்ற ஆய்வாளர்களும் இதில் பங்குபற்றுகின்றார்கள்.

இந்த பொறியியல் ஆய்வு மாநாடு பல சமூக பிரச்சினைகளை பொறியியல் நோக்கோடு ஆய்வு செய்து அவற்றிக்கு தீர்வுகளை காணவுள்ளது. இதன் போது தெரிவு செய்யப்படுகின்ற சிறந்த ஆய்வுக் கட்டுரைகள் பிரசுரிக்கப்படவுள்ளது. இதற்காக பல முன்னணி பல்கலைகழகங்கள், பேராசிரியர்கள் ஆகியோர் உதவி செய்துள்ளனர் என மேலும் தெரிவித்தார். (4-104)

# அதிக விலைக்கு தண்ணீர் போத்தல் விற்ற உணவகத்திற்கு எதிராக நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

தண்ணீர் போத்தலை அதிக விலைக்கு விற்பனை செய்ததாக நெல்லியடியில் உள்ள உணவகம் ஒன்றுக்கு எதிராக யாழ்.மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நெல்லியடியில் உள்ள உணவகம் ஒன்றில் 35 ரூபாய் விற்பனை விலையாக பொறிக்கப்பட்ட தண்ணீர் போத்தலை 70 ரூபாய்க்கு விற்பனை செய்வதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில், விசாரணைகளை முன்னெடுத்த அதிகாரிகள் அதிக விலைக்கு தண்ணீர் போத்தலை விற்பனை செய்தமையை உறுதிப்படுத்தி நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அதேவேளை தண்ணீர் போத்தலை சான்றுப் பொருட்களாக கைப்பற்றியுள்ளனர். அவற்றை நீதிமன்றில் பாரப்படுத்தி குறித்த உணவக உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (4-18-33)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 450 | 350 | 400 | 350 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 300 | 480 | 600 |
| தக்காளி | 400 | 280 | 450 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 300 | 300 | 240 |
| கோவா | 340 | 350 | 450 | 400 |
| கரட் | 320 | 350 | 380 | 450 |
| பூசணி | 130 | 100 | 120 | 120 |
| புடோல் | 120 | 120 | 120 | 180 |
| வாழைக்காய் | 160 | 140 | 140 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 250 | 200-400 | 350 |
| பெரிய வெங்காயம் | 200 | 190 | 170 | 160 |
| பாகற்காய் | 450 | 400 | 500 | 400 |
| வெண்டிக்காய் | 120 | 120 | 100 | 240 |
| கருணைக் கிழங்கு | 180 | 220 | 200 | 200 |
| பயற்றங்காய் | 400 | 200 | 140 | 150 |
| லீக்ஸ் | 350 | 260 | 280 | 300 |
| பீற்றூட் | 200 | 200 | 160 | 200 |
| கறிமிளகாய் | 600 | 700 | 500 | 800 |
| முருங்கைக்காய் | 500 | 500 | 400 | 500 |
| போஞ்சி | 600 | 700 | 600 | 800 |
| கத்தரிதம்புள்ள | 400 | 250 | -- | 320 |
| கீரை - 1 பிடி | 140 | 100 | 100 | 120 |
| தேசிக்காய் | 250 | 250 | 250 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 40-80 | 50-80 |
| இராசவள்ளி | 200 | 300 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 250 | 300 | 300 | 400 |
| முள்ளங்கி | 140 | 120 | 120 | 200 |
| பொன்னாங்கண்ணி | 60 | 90 | 100 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 80 | 40 |
| ஈரப்பலா | 120 | 80 | 80 | 120 |

# கரவெட்டியில் தனியார் பேருந்து சாரதி மீது தாக்குதல்

(கரணவாய்)

பாடசாலை சேவையை மேற்கொள்ளும் தனியார் பேருந்து சாரதி இனந்தெரியாதோரால் தாக்கப்பட்ட நிலையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை 6.45 மணியளவில் கரவெட்டி கட்டைவேலி பகுதியில் நடைபெற்றது.

சம்பவத்தில் கரவெட்டி கோயிற்சந்தை பகுதியைச் சேர்ந்த 26 வயதான சி.அமலன் என்பவரே தலையில் காயம் ஏற்பட்ட நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பாடசாலை மாணவர்களை ஏற்றிக் கொண்டு வரும் வேளை 3 மோட்டார் சைக்கிள்களில் வந்த 6 பேர் குறித்த தனியார் பேருந்தினை வழிமறித்து மோட்டார் சைக்கிள் தலைக்கவசத்தால் தலையில் தாக்கி விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக நெல்லியடி பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (4-60)

# அதிபர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தின் அதிபராக கி.தவஜீவன் நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் பதவியேற்ற அவர் கோப்பாய் நாவலர் வித்தியாலயத்தின் அதிபராகக் கடமையாற்றியிருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருந்துப் பொருட்களின் நெருக்கடிக்கு தீர்வுகோரி சுகாதாரத்துறை ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிராக சுகாதாரத் துறை ஊழியர்களின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இலங்கை தேசிய மருத்துவமனைக்கு முன்பாக நேற்று நடைபெற்றது.



சுகாதார சங்கத்தின் ஊழியர்கள் அனைவரும் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

சுகாதாரத் துறையில் மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கு நிலவும் தட்டுப்பாடுகளுக்கும் நாட்டின் நெருக்கடி நிலைமைக்கு விரைவான தீர்வைக் கோரியும் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. (நி)

# நீர்க் கட்டணத்தை அதிகரிக்க தீர்மானம்

(கொழும்பு)

எதிர்வரும் முதலாம் திகதி முதல் நீர்க்கட்டணத்தை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளதோடு அதற்கிணங்க இந்த வாரம் கட்டண அதிகரிப்பை அறிவித்து வர்த்தமானி அறிவித்தல் வெளியிடக் கூடும் என நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

இதற்கமைய தற்போது வீட்டுப் பாவனைக்காக அறவிடப்படுகின்ற நீர்கட்டணத்தை 60 முதல் 70 சதவீதம் வரையில் அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் வணிக ரீதியான நீர் விநியோகத்துக்கு அறவிடப்படும் கட்டணமும் அதிகரிக்கப்படவுள்ளது.

இதற்கமைய தற்போது அறவிடப்படும் சேவைக் கட்டணத்தை 50 ரூபாவில் இருந்து 300 ரூபாவாக அதிகரிப்பதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இறுதியாக 2012 ஆம் ஆண்டு நீர்க்கட்டணம் திருத்தப்பட்டது.

இதன்படி கடந்த 10 ஆண்டுகளாக நீர் உற்பத்திக்கான செலவு அதிகரித்துள்ளமையை கருத்திற்கொண்டு இவ்வாறு கட்டணத்தை அதிகரிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (நி)

## ஒரு கிலோ நெல்லை

# 120 ரூபாவிற்கு கொள்வனவு செய்ய அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

நெல் சந்தைப்படுத்தல் சபையினால் இன்று முதல் கொள்வனவு செய்யப்படவுள்ள புதிய விலைகள் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, ஒரு கிலோ கிராம் நாடு நெல்லை 120 ரூபாவுக்கு கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

குறிப்பாக,சம்பா நெல்லை 125 ரூபாவுக்கும் கீரிச்சம்பா நெல்லை 130 ரூபாவுக்கும் கொள்வனவு செய்யவுள்ளதாக அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (நி)

# சர்வகட்சி அரசாங்கத்திற்கு தடைக்கல்லாக பசில்

## திஸ்ஸ விதாரண சாடல்



(கொழும்பு)

சர்வகட்சி அரசாங்கத்தை உருவாக்குவதற்கு முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ பாரிய தடைகளை ஏற்படுத்தியுள்ளார் என லங்கா சமசமாஜ கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் மக்களால் புறக்கணிக்கப்பட்ட பொதுஜனபெரமுன தலைமையிலான அரசாங்கத்தை முன்னெடுப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகிறது. பதவியை தக்கவைத்துக் கொள்ள ரணிலும் பொதுஜனபெரமுனவிற்கு ஏற்றாற்போல் செயற்படுகிறார் என குற்றம் சுமத்தினார்.

சர்வ கட்சி அரசாங்கத்தின் வியூகம் மற்றும் அதன் செயற்பாடு தொடர்பில் ஜனாதிபதி இதுவரை வெளிப்படை தன்மையுடன் பேச்சுவார்த்தையினை முன்னெடுக்கவில்லை எனவும் சுட்டிக்காட்டினார்.

சர்வகட்சி அரசாங்கத்தை உருவாக்குவதற்கு முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ பாரிய தடைகளை ஏற்படுத்தியுள்ளார்.

சர்வகட்சி அரசாங்கத்தை ஸ்தாபிக்காமல் மக்களால் புறக்கணிக்கப்பட்ட பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கத்தை முன்னெடுத்து செல்லும் அரசியல் சூழ்ச்சியினை பசில் ராஜபக்ஷ முன்னெடுத்துள்ளார் எனவும் தெரிவித்தார்.

அரசாங்கத்திற்கு எதிரான மக்கள் போராட்டம் நிறைவடைந்துள்ளது ஆகவே தனது விருப்பப்படி செயற்படலாம் என அரச தலைவர்கள் கருதுவது தவறானது. சர்வகட்சி அரசாங்கத்தை நிறுவி பிரச்சினைகளுக்கு தீர்வு காண மக்கள் அரசாங்கத்திற்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

சர்வகட்சி அரசாங்கத்தை அமைக்காமல் பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் தோற்றம் பெற்றால் மக்கள் மீண்டும் போராட்டத்தில் ஈடுபடுவார்கள் என அவர் தெரிவித்தார். (நி)

# விமானங்களுக்கான எரிபொருளை இறக்குமதி செய்ய தனியாருக்கு அனுமதி

## நிமால் சிறிபால டி சில்வா

(கொழும்பு)

விமானங்களுக்குத் தேவையான எரிபொருளை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் வழங்க முடியாவிட்டால் தனியார் துறைக்கு எரிபொருளை இறக்குமதி செய்ய அனுமதிக்க வேண்டும் என துறைமுகங்கள், கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். (நி)

## அடுத்த மாதம் முதல்

# தாமரைக் கோபுரத்தை திறந்து வைக்கத் திட்டம்

(கொழும்பு)

சீனக் கடனுதவியில் கொழும்பில் நிர்மாணிக்கப்பட்ட தாமரைக் கோபுரத்தை அடுத்த மாதம் 15 ஆம் திகதி முதல் திறந்து வைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

வர்த்தக நன்மைகளை பெற்றுக்கொள்ளும் நோக்கில் முதலீட்டு வாய்ப்புகளுக்காக இந்த 300 மீற்றர் உயர கோபுரத்தை திறக்க கொழும்பு தாமரைக் கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, தாமரைக் கோபுரத்தில் அலுவலக வசதிகள், காட்சியறைகள், மாநாட்டு அரங்குகள் மற்றும் பிரத்தியேகமான வர்த்தக நிலையங்களை பெற முதலீட்டாளர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அவ்வாறே அதில், சர்வதேச அளவிலான நிகழ்வுகள், இசை நிகழ்ச்சிகள் மற்றும் கண்காட்சிகளை ஏற்பாடு செய்வதற்கான வாய்ப்பும் கிடைக்கும்.(நி)

# சைக்கிள் விற்பனை வீழ்ச்சி; விலையும் குறைந்தது

(கொழும்பு)

துவிச்சக்கர வண்டிகளின் விற்பனைகள் சடுதியாக வீழ்ச்சியடைந்துள்ளதாக துவிச்சக்கர வண்டி இறக்குமதியாளர்கள் மற்றும் உதிரிப்பாக விற்பனையாளர்கள் சங்கத்தின் இணை செயலாளர் ரிஸ்னி இஸ்மத் தெரிவித்துள்ளார்.

துவிச்சக்கர வண்டிகளின் விற்பனைகள் வீழ்ச்சியடைந்துள்ளதன் காரணமாக அதன் விலைகளும் வெகுவாக குறைவடைந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக துவிச்சக்கர வண்டிகளுக்கான கேள்வி அதிகரித்து காணப்பட்டது.

இதன் காரணமாக துவிச்சக்கர வண்டிகளின் விலைகள் சடுதியாக அதிகரித்திருந்ததுடன் அதற்கான தட்டுப்பாடுகளும் ஏற்பட்டிருந்தன.

தற்போது, தட்டுப்பாடு இன்றி எரிபொருள் கிடைக்கின்றமையால் துவிச்சக்கர வண்டிகளின் பயன்பாடு குறைவடைந்துள்ளதாக துவிச்சக்கர வண்டி இறக்குமதியாளர்கள் மற்றும் உதிரிப்பாக விற்பனையாளர்கள் சங்கத்தின் இணை செயலாளர் தெரிவித்துள்ளார். (நி)


## வேலை வாய்ப்பு

இலங்கையின் முன்னணி நிதி நிறுவனத்தின் நெல்லியடிக் கிளையில் மிக குறைந்தளவு பதவி வெற்றிடங்களுக்கான நேர்முகத்தேர்வு நடைபெற உள்ளது.

- வடமராட்சி பிரதேசத்தில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
- க.பொ.த.உயர்தரத்தில் சித்தி.
- முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

தகைமை உள்ளவர்கள் தங்கள் சுயவிபரக்கோவையை

19.08.2022 இற்கு முன்

Whatsapp- 077 263 1426

e-mail-apartheepan15@gmail.com

மேற்குறிப்பிட்ட whatsapp மற்று e-mail இற்கு அனுப்பி வைக்கவும்.

தொடர்புகளுக்கு: 077 263 1426

(சி-4745)



## காணவில்லை

சிவசக்தி கோவிலடி அச்சுவேலி தெற்கு, அச்சுவேலியை வதிவிடமாகக் கொண்ட 59 வயதுடைய சிவம் சிவநாதன் (மூர்த்தி) என்பவரை கடந்த 08.08.2022 அன்றிலிருந்து காணவில்லை. அவரைக் கண்டவர்கள் கீழ் காணும் தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளவும்.



(12457)

S.ராஜயோகேஸ்வரன் (அண்ணா)
சிவசக்தி கோவிலடி,
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.

T.P.No: 077 897 5051
077 588 9763


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## அம்புலிமாமா

# இரு கேள்விகள்

(நேற்றைய தொடர்ச்சி)

அப்போது அங்கே ஒரு இளைஞன் வந்தான். அவன் தன் பெயர் சோமசேகரன் என்று கூறித் தன்னைக் கனகரத்தினத்திடம் அறிமுகம் செய்து கொண்டான். அவனிடம் "நீ பிரம்ம ராட்சஸியை எப்படி ஒழிக்கப் போகிறாய் என்று பார்க்க வந்தேன். நானும் உன் நண்பருக்குத் துணையாக இங்கே உட்கார்ந்திருக்கிறேன்" என்றான்.

கனகரத்தினம் அது கேட்டு மகிழ்ந்து "இவர் ஞானசேகரர். பெரிய பண்டிதர். ராட்சஸி கேட்கும் கேள்விகளுக்கு பதிலை எனக்குச் சொல்லி உதவ வந்திருக்கிறார்" எனக் கூறி அவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு காட்டிற்குள் சென்றான்.

கனகரத்தினம் காட்டினுள் கொஞ்ச தூரம் போனதுமே யாரோ பலமாகச் சிரித்து அவனைப் பிடித்து நிறுத்தவே அவன் திரும்பி பார்த்தான். பயங்கரக் கரிய உருவில் பிரம்ம ராட்சஸி அவன் முன் வந்து அவனைத் தன் கைப்பிடிக்குள் பிடித்து உயரத் தூக்கியது.



கனகரத்தினம் சற்றும் பயப்படாமல் அதனை உற்றுப் பார்த்தான். அது கண்டு பிரம்மராட்சஸி "என்னைக் கண்டாலே எல்லோரும் பயப்படுவார்கள். நீ ஏன் நடுங்கவில்லை? நீ மாபெரும் வீரனா அல்லது அறிவு கெட்டவனா?" என்று கேட்டது.

கனகரத்தினமும் "நான் யாராக இருந்தால் உனக்கு என்ன? நீ பிரம்ம ராட்சஸிதானே. உன் கேள்விகளைக் கேள்" என்றான். அதுவும் "பூவுலகில் கண்கண்ட தெய்வம் யார்?" என்று தன் முதல் கேள்வியைக் கேட்டது. அப்போது கனகர்த்தினம் "சரி. இதற்கு அடுத்த கேள்வியையும் கேள். இரண்டிற்கும் பதில் கூறுகிறேன்" என்றான்.

பிரம்ம ராட்சஸியும் "என் இரண்டாவது கேள்வி குற்றம் புரிந்தவனை தண்டித்து விட்டு அவ்விதம் தண்டனை கொடுத்ததற்காக மிகவும் வேதனைப்படுபவர் யார் என்பதே" என்றது.


கனகரத்தினம் ஒரு நிமிடம் எதுவும் பேசாமல் நின்றான். பிறகு அவன் "இவற்றிற்கு பதில் கூறுமுன் என் ஒரு வேண்டுகோளை நீ ஏற்க வேண்டும். என் உயிருக்குயிரான இரு நண்பர்கள் காட்டின் எல்லையில் உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்களை ஒருமுறை பார்த்து விட்டு வந்து உன் கேள்விகளுக்கு பதில் கூறுகிறேன். ஏனெனில் உன் கேள்விகளுக்குத் தவறான விடைகளைக் கூறினால் என்னை நீ விழுங்கி விடுவாய். மறுபடியும் அவர்களைப் பார்க்க முடியாதே" என்றான்.

பிரம்ம ராட்சஸி "நீ நல்லவனாகத் தோன்றுகிறாய். சொன்ன சொல் தவறமாட்டாய் என்றே நினைக்கிறேன். நீ துணிச்சலானவன். பயப்படுபவனல்ல. அதனால் உன் வேண்டுகோளை ஏற்கிறேன். நீ சட்டென திரும்பி வந்து விடு" என்று கூறி அவனைத் தரையில் இறக்கி விட்டது. கனகரத்தினமும் வேகவேகமாக ஓடிக் காட்டின் எல்லையை அடைந்தான்.

(தொடரும்)

# சிலப்பதிகாரம்

## பிரிந்தவர் கூடினால்




எத்தனைக் காலம் கழித்து வந்திருக்கிறார்! "வாருங்கள், வாருங்கள். இது நம் வீடு ஏன் வாசலிலேயே நிற்க வேண்டும்?" மலர்ந்த முகத்தோடு கோவலனை வரவேற்றாள் கண்ணகி அன்போடு அவனை உள்ளே அழைத்துப் போனாள்.

கோவலனுக்கு அவளை நிமிர்ந்து பார்க்கவே கூச்சமாக இருந்தது. "எப்பேர்ப்பட்ட பெண், இவளுக்குத் துரோகம் இழைத்து விட்டேனே!"

செல்வம் அத்தனையையும் இழந்து, ஒன்றுமில்லாதவனாக வந்திருக்கிறேன் என்பது தான் கோவலன் பேசிய முதல் வாக்கியம். என்ன இது? இவர் திரும்பக் கிடைத்த சந்தோசத்தில் நான் இருக்கிறேன். என்னைப் பார்த்த சந்தோசம் இல்லாவிட்டால் போகிறது செல்வம் போயிற்று என்று கவலைப்படுவானேன்? கையில் எதுவுமில்லையே என்பதுதான் அவர் கவலையா? மாதவிக்குத் தர எதுவும் இல்லாததால்தான் அவர் இங்கே வந்தாரோ? எதற்காக அந்த ஏமாற்றத்தை அவருக்குத் தர வேண்டும்?

செல்வம் ஏன் அவருடைய சந்தோசத்துக்குத் தடையாக இருக்கவேண்டும்? சந்தோசம், துக்கம் இரண்டிலும் துணை நிற்பதுதானே பத்தினிக்கு அழகு கோவலன் சந்தோசம் தொடர்வதற்குத் தன்னால் என்ன செய்ய முடியும் என்று யோசித்தாள் கண்ணகி.

சில விநாடிகள் தான்... அவளுடைய கால்களில் இருந்த சிலம்புகள் கண்ணில் பட்டன. விலை உயர்ந்த சிலம்புகள் அவை. மாநாய்கன் தன் மகளைப் புகுந்த வீட்டுக்கு அனுப்பும் போது தங்கச் சிலையாக அனுப்பினார்.

நெற்றியில் அணியும் சூடியிலிருந்து கால் சிலம்புகள் வரையில் ஒவ்வொன்றும் அரச குடும்பத்தில் அணியும் நகைகள் அளவுக்கு மதிப்பு மிகுந்தவை.

உங்களிடம் செல்வம் இல்லை என்று யார் சொன்னது? என் கால் சிலம்புகள் இரண்டும் இருக்கின்றனவே? என்று கழற்றி நீட்டினாள் கண்ணகி.

இருவர் கண்களிலிருந்தும் கண்ணீர் பெருகியது. சில நிமிடங்கள் இருவருமே எதுவும் பேசவில்லை.

"நான் தவறு செய்து விட்டேன் கண்ணகி"

"எந்தத் தவறும் நடக்கவில்லை"

உன் மாதிரி ஒரு பத்தினித் தெய்வத்தை, கற்புத்தீயை தனிமை துயரில் விட்டது என்னுடைய தவறு தான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னம்பிக்கைதான் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணத் தூண்டும்.
– தானோபஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## விவசாய அமைப்புகள் கருசனையுடன் செயலாற்ற வேண்டும்

இலங்கைத் திருநாட்டில் தமிழ் மக்களின் பின்தங்கிய நிலைமைக்கு தனித்து சிங்கள ஆட்சியாளர்கள் மட்டுமே காரணம் என்று கூறிவிட முடியாது.

மாறாக நம்மவர்களும் நமக்குப் பாதகமாக இருக்கின்றனர் என்பதை இங்கு கூறித்தானாக வேண்டும்.

இதை நாம் கூறும்போது, எதற்காக அப்படிக் கூறுகிறீர்கள் என்று நீங்கள் யாரேனும் கேட்கலாம்.

ஆனால் யதார்த்தத்தில் நம் தமிழ்த் தரப்புகளைக் கொண்டு ஒரு வேலையைச் செய்விப்பதென்பது முடியாத காரியம்.

ஆம், எதற்கும் தடை. எதிலும் எதிர்மறைச் சிந்தனை. எதையும் காலம் கடத்துவது. அரச கடமையை துஷ்பிரயோகம் செய்வது. பழிதீர்ப்பது என்றவாறு நம்மவர்கள் செயலாற்றுவதால் எதனையும் நாம் இலகுவாக பெறமுடிவதில்லை.

எனவே எங்கள் மக்களுக்கு எவ்வாறு உதவ முடியும் என்று நாம் அனைவரும் சிந்திப்போமாயின், அபிவிருத்தியும் கல்வியும் பொருளாதார செழுமையும் எங்கள் மண்ணில் எழுச்சி கொள்ளும்.

அந்தவகையில் இன்றைய பொருளாதார நெருக்கடி நிலையில் இருந்து நம் மக்களைப் பாதுகாக்க வேண்டுமாயின், அதற்கான முதன்மை வழி விவசாயத்தை ஊக்குவிப்பதாகும்.

இங்கு விவசாயம் என்பதில் நெற் செய்கை முதன்மை பெறுகின்றது.

அதாவது பெரும்போக நெற்செய்கை ஆரம்பமாக இருப்பதால் தமிழர் தாயகத்தில் இருக்கக்கூடிய அத்தனை வயல் நிலங்களையும் நெற்செய்கைக்கு உட்படுத்துவது அவசியமாகும்.

இது விடயத்தில் விவசாய மற்றும் கமக்கார அமைப்புகள் மிகவும் கருசனையோடு செயலாற்ற வேண்டும்.

அதிலும் குறிப்பாக நெற்செய்கையாளர்களைப் பதிவு செய்வது அவர்களுக்கு உரமானியம் கிடைக்க வழி செய்வது என்ற விடயங்களில் அந்தந்தக் கமக்கார அமைப்புகள் கருசனையுடன் செயலாற்றுவது கட்டாயமானதாகும்.

பொதுவில் சில கமக்கார அமைப்புகள் பதிவுகளை ஒழுங்காக மேற்கொள்ளாமலும் திட்டமிட்டு சிலவரை ஒதுக்குவதிலும் பிரதேசவாதம் பார்ப்பதிலும் நெற்செய்கைக்குரிய உதவிகள் சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்குக் கிடைக்காமல் போகின்றன.

எனவே கமக்கார அமைப்புகள் பதிவினை மேற்கொள்ளாதவிடத்து, சம்பந்தப்பட்ட நெற்செய்கையாளர்கள் தம்மைப் பதிவு செய்வதற்கும் உரமானியங்களைப் பெற்றுக் கொள்வதற்குமான உரிய ஏற்பாட்டை கமநல சேவை நிலையங்கள் செய்ய வேண்டும்.

அப்போதுதான் நெற்செய்கையில் நம் மக்கள் முனைப்போடு ஈடுபடுவர்.

# எமது உணவுத் தேவைகளை நிவர்த்தி செய்ய உள்ளூர் உற்பத்திகளை ஊக்குவிக்க வேண்டும்

## வடமாகாண பிரதி விவசாயப் பணிப்பாளர்

(சாவகச்சேரி)

எமது அன்றாட உணவுத் தேவைகளை உள்ளூர் உணவு உற்பத்திகள் ஊடாக நிவர்த்தி செய்ய வேண்டும் என மாகாண பிரதி விசாயப் பணிப்பாளர் திருமதி. அஞ்சனாதேவி சிறீரங்கன் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை திருநெல்வேலி பகுதியில் இடம் பெற்ற "சஞ்சீவி" மாதர் பாரம் பரிய உள்ளூர் உற்பத்தி விற்பனை நிலையத் திறப்பு விழா நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், பெண்கள் படிப்படியாக தாமாக முன்னேறி வருகின்றனர். அவர்களது முன்னேற்றத்திற்கு தடைபோடாமல் மேலும் அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும். விழுதுகள் சமூக மேம்பாட்டு அமையத்தினர் பெண்களை முன்னேற்றுகின்ற சிறந்த செயன்முறைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

உள்ளூர் உற்பத்திகளில் ஈடுபடுகின்ற பெண்கள் உரிய சான்றிதழ்களை கொண்டிருக்க வேண்டும். அவ்வாறு சான்றிதழ்களை வைத்திருக்கும் போது உங்கள் உற்பத்திகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ய முடிவதுடன் கொள்வனவு செய்பவர்களும் ஐயப்பாடின்றி உற்பத்திகளை கொள்வனவு செய்ய முடியும்.

தற்போது உணவுப் பற்றாக்குறை பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. அறுவடைக்கு பின்னரான இழப்பு ஊடாக பெருமளவான உணவுகளை இழக்க நேரிடுகிறது. அறுவடைக்குப் பின்னரான இழப்பில் இருந்து எமது உற்பத்திகளை காப்பாற்ற வேண்டும்.

ஒரு சாதாரண நபர் வருடம் ஒன்றிற்கு 110 கிலோகிராம் அரிசியை உணவாக உட்கொள்ளும் அதேவேளையில் 54-56 கிலோ கிராம் கோதுமை மாவினையும் உள்ளெடுக்கின்றார். எமக்கான கோதுமை மாவினை இறக்குமதி செய்ய பணம் இல்லாததால் தான் விலை வெகுவாக அதிகரித்துள்ளது.

எனவே நாம் கோதுமை மாவிற்கு மாற்றீடான மரவள்ளி மா, குரக்கன் மா, சாமை, திணை, ஒடியல் மா போன்ற உள்ளூர் உற்பத்திகளை உண வாக உட்கொள்ள வேண்டும்.

உள்ளூர் உணவு உற்பத்தி களை வருங்கால சந்ததியினருக்கு அறிமுகம் செய்ய வேண்டும் என தெரிவித்தார். (4-30)

# மன்னாரில் மீன் வாடிகளை தீயிட்டு கொளுத்திய விஷமிகள்

(மன்னார்)

மன்னார் பேசாலை-காட்டாஸ்பத்திரி பகுதியில் கடற்கரையோரத்தில் அமைக்கப்பட்ட மீன் வாடிகள் ஞாயிற்றுக்கிழமை இரவு விஷமிகளால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்தில் 3 வாடிகள்,25 குதிரை வலு கொண்ட 3 மீன்பிடி இயந்திரங்கள் , பெறுமதிமிக்க நண்டு, கூடை, கிளைக்கன் மீன் வலைகள், பல பெறுமதியான பொருட்கள் தீயில் எரிந்து சாம்பலாகி உள்ளன.

சம்பவ தினத்திற்கு முன் கடந்த 13 ஆம் திகதி தனிநபர் ஒருவருடன் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் காரணமாக குறித்த நபர் இந்த நாசகார வேலையை செய்துள்ளதாக பாதிக்கப்பட்ட தரப்பினர் பேசாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

அங்கு உரிய நீதி கிடைக்காத காரணத்தினால் பாதிக்கப்பட்ட தரப்பினர் நேற்று மன்னார் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரிடம் முறையிடுவதற்கு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்திற்கு சென்றுள்ளனர்.

கடந்த புரேவிப் புயல் பாதிப்பு, கொரோனாவால் தொழில் இழப்பு காலங்களில் மிகவும் கஷ்டப்பட்டு தொழில் செய்வதற்கு கடன் அடிப்படையில் பெறப்பட்ட உபகரணப் பொருட்களை விஷமிகள் தீயிட்டு கொளுத்தி உள்ளார்கள் என பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்துள்ளனர். (4-285)

# கிளிநொச்சியில் நகைக்கடை உரிமையாளரை கடத்திய வாகன உரிமையாளர் கைது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரிலுள்ள நகைக்கடை ஒன்றின் உரிமையாளரை கடத்திய வாகனத்தின் உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் - கோப்பாய் பகுதியை சேர்ந்த 22 வயதான இளைஞர் ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

கோப்பாய் பகுதியில் வீட்டில் தங்கியிருந்த போது நேற்று முன்தினம் மாலை சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலும் 4 சந்தேகநபர்கள் தலைமறைவாகியுள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கிளிநொச்சி நகரிலுள்ள நகைக்கடை உரிமையாளர் கடந்த 11ஆம் திகதி இரவு கடத்தப்பட்டதுடன், 12ஆம் திகதி அதிகாலையில் குறித்த நகைக்கடையில் இருந்த நகைகளும் சந்தேக நபரால் திருடப்பட்டுள்ளது.

சுமார் 14 பவுண் தங்க நகைகள் திருடப்பட்டுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# தனங்களப்பு விவசாயிகளுக்கு இன்று டீசல்

(சாவகச்சேரி)

தென்மராட்சி-தனங்களப்பு கமக்கார அமைப்பிற்குட்பட்ட நெற்செய்கையாளர்களுக்கு இன்று புதன்கிழமை உழவுக்குத் தேவையான டீசல் வழங்கப்படும் என தனங்களப்பு கமக்கார அமைப்பினர் அறிவித்துள்ளனர்.

எனவே குறித்த நெற்செய்கையாளர்கள் தேசிய அடையாள அட்டை, குடும்ப அட்டை, ஏக்கர் வரிச்சிட்டை ஆகியவற்றுடன் கைதடி கமநல சேவை நிலையத்திற்குச் சென்று தமக்கான டீசலை பெற்றுக்கொள்ள முடியும் என மேலும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (4-30)

# யாழிலிலிருந்து காலி நோக்கி பயணித்த ரயிலில் குழப்பம் விளைவித்த மூவர் பொலிஸாரால் கைது

யாழ்ப்பாணம், காங்கேசன்துறையில் இருந்து காலி நோக்கி பயணித்த தொடருந்தில் மதுபோதையில் குழப்பம் ஏற்படுத்தும் வகையில் செயற்பட்ட 3 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த மூவரும் தொடருந்திற்கு சேதம் ஏற்படுத்தும் வகையில் செயற்பட்டுள்ளனர்.

அத்துடன் ஆசன விவகாரம் தொடர்பில் குறித்த மூவரும் ஒருவர் மீது தாக்குதல் நடத்தவும் முயற்சித்துள்ளனர்.

இது தொடர்பில் பயணிகள் பொலிஸாருக்கு முறைப்பாடு செய்துள்ளனர். இதனையடுத்து, குழப்பம் ஏற்படுத்தும் வகையில் செயற்பட்ட 3 பேரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். (ம-7)

# வென்மேரி விருதுகள்

(யாழ்ப்பாணம்)

வென்மேரி அறக்கட்டளை நிதியம் நடாத்தும் தமிழின் ஆற்றல் மிகு ஆளுமைகளை அங்கீகரித்து கௌரவிக்கும் "வென்மேரி" விருதுகள் விழா (இன்று) புதன் கிழமை இலங்கை வேந்தன் கலைக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

மாலை 3 மணியளவில் மங்கள விளக்கேற்றத்துடன் ஆரம்பமாகி இந் நிகழ்வில் பல்வேறு கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளதுடன் பேராளுமை விருதுகள், வாழ்நாள் சாதனையாளர் விருதுகள், பல்துறைசார் ஆளுமை விருதுகள் மற்றும் இளையோர் ஊக்குவிப்பு விருதுகளும் வழங்கி சாதனையாளர்கள் கௌரவிக்கப் படவுள்ளனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 53

**அங்கு புடினுடன் சேர்ந்து தொலைக்காட்சி புகைப்படக் கருவிகளுக்கு முன் பேட்டிய ளித்த அவர், மீண்டும் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்ற கருத்திற்கு எதிராகக் கடுமை யாக கருத்து தெரிவித்தார்.**

**உக்ரைனின் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு**

ஐந்து நாட்கள் விவாதங்களுக்கு பின்னர், டிசெம்பர் 2 ஆம் திகதி மாலை, பூசலிற்குட்பட்டிருந்த ஜனாதிபதி தேர் தலில், உக்ரைனின் உச்ச நீதிமன்றம் தன்னுடைய தீர்ப்பை வழங்கியது.

அப்பொழுது பிரதம மந்திரியாக இருந்த விக்டர் யானுகோவிச் வெற்றி பெற்றார் என்று நாட்டின் தேர்தல் அதிகாரிகளால் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், நவம்பர் 21 அன்று நடந்த தேர்தலின் வாக்குகளை நீதிமன்றம் பிழையானவை என்று கூறிவிட்டு, யானுகோவிச்சிற்கும், அமெரிக்க- ஐரோப்பிய ஆதரவு பெற்றுள்ள எதிர்க் கட்சித் தலைவரும் முந்தைய பிரதம மந்திரியாகவும் மத்திய வங்கியின் தலைவராகவும் இருந்த விக்டர் யுஷ் செங்கோவிற்கும் இடையே யார் ஜனா திபதியாக இருப்பது எனத் தீர்மானிக்க புதிய தேர்தலும் வாக்களிப்பும் நடை பெற வேண்டும் என்று தீர்ப்புக் கூறியது.

முக்கியமாக யுஷ்செங்கோ முகாமில் இருந்தும் அதன் மேலைநாட்டு ஆதர வாளர்களும் தெரிவித்திருந்த பரந்த முறையிலான தேர்தல் மோசடிகளை மேற்கோளிட்டு நீதிமன்றம் இந்தத் தீர்ப்பைக் கொடுத்துள்ளது.

யானுகோவிச் மற்றும் ஜனாதிபதி லியோனிட் குச்மா கோரியிருந்த ஆரம்ப கட்டத்தில் இருந்து புதிய வேட்பாளர்க ளும் பங்குபெற வகைசெய்யும் தேர் தல்கள் தேவை என்ற ஆலோசனை களுக்கு எதிராக, கீவ்வில் பெரும் மக்கள் தொகுப்பின் எதிர்ப்புக்களையும் ஆர்ப் பாட்டங்களையும் நடத்தியிருந்த எதிர்க் கட்சியின் செயற்பட்டியலுக்கு பெரிதும் ஒத்துப்போகும் வகையில் நீதிமன்ற முடிவு இருந்தது.

இவ்வகையிலான யானுகோவிச் மற்றும் யுஷ்செங்கோ விற்கிடையே மட்டும் நடக்கும் புதிய தேர்தல் விரை வாக நடத்தப்பட வேண் டும் என்ற எதிர்க்கட்சியின் கோரிக் கையையும் நீதிமன்றத் தீர்ப்பு ஏற்றது.

**டிசெம்பர் 26 ஆம் திகதி புதிய தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவு இட்டது. இது ஒரு புதியதும் (விக்டர் யானு கோவிச் மற்றும் விக்டர் யுஷ் செங்கோ ஆகிய இருவருக்கி டையேயான தேர்தலாக மட் டுமே நடத்தப்பட வேண்டும் என்றும் அறிவித்தது.**

வோஷிங்டனும், ஐரோப்பிய ஒன்றிய மும் (EU) வெளிப்படையாகவும், ஆணித் தரமாகவும் "ஜனநாயக" எதிர்க்கட்சி என அழைக்கபடுவோரின் நிலைப்பாட்டை ஆதரித்திருந்தன. இந்த எதிர்ப்பிற்கு ஏற்பாடு செய்து மிகப் பெரிய அளவில் நிதி உதவி கொடுத்ததும் வோஷிங்டனும் ஐரோப்பிய ஒன்றியமுமேயாகும். மேலும் ஒரு முற்றிலும் புதிய தேர்தல் வேண்டும் என்பதை யுஷ்செங்கோவ் எதிர்ப்பதற்கும் இவை உதவின.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினோ, யானுகோவிச்சிற்காக பிரசார த்தை மேற்கொண்டிருந்ததோடு, மறு வாக்கிற்கான நடவடிக்கைகளை வெளிப் படையாகக் கண்டனத்திற்கு உட்படு த்தியும் இருந்தார்.

புதிய தேர்தலுக்கான கோரிக்கை பற்றி புடின் கூறுகையில், "ஒரு புதிய தேர்தல் நடத்தப்பட்டு ஒருவர் மூன்று, நான்கு அல்லது இருபத்து ஐந்து தடவைகள் கூட, ஒரு கட்சி தனக்கு இணக்கமான வாக்குகளைப் பெறும் வரையில் வாக்கெடுப்பு நடத்தப்படலாம் போலும்" என்றார்.

**நீதிமன்றம் தீர்ப்பளிப்பதற்கு ஒரு நாள் முன்னதாக, உக்ரைனு டைய ஜனாதிபதி லியோனிட் குச்மா மொஸ்கோவிற்கு விமா னம் மூலம் சென்றிருந்தார்.**

இதைத் தொடர்ந்து ரஷ்ய டுமா (பாராளுமன்றம்), ஐரோப்பிய ஒன்றி யம், ஐரோப்பிய பாராளுமன்றம் மற்றும் ஐரோப்பியப் பாதுகாப்பு ஒத்துழைப் பிற்கான அமைப்பு (OSCE) ஆகியவை உக்ரைனில் தோன்றியுள்ள அமைதி யற்ற நிலையைத் தூண்டிவிடும் வகை யில் செயற்படுவதாக குற்றம் சாட்டும் தீர்மானம் ஒன்றை மிகப் பெரிய பெரும் பான்மையுடன் இயற்றியது. இந்த அமைப்புக்களின் தலையீடு "மிகப் பெரிய ஒழுங்கின்மை, குழப்பம், நாடு பிளவு பெறுதல்" போன்றவற்றிற்கு வழிகோலும் என்றும் "இதனால் உக் ரைனுக்கு மட்டும் இல்லாமல் ரஷ்யா விற்கும் ஐரோப்பாவின் அனைத்துப் பகுதிகள் மற்றும் சர்வதேச சமூகம் முழுவதிற்குமே தீவிரமான எதிர்மறை விளைவுகள் ஏற்படும்" என்றும் அது அறிவித்தது.

அதிக கடுமையான விமர்சனம் என்று இல்லாமலேயே, இதுவரை உக்ரைன் உச்ச நீதிமன்றம் அதன் அரசியல் சுதந்திரத்திற்கு பெயர் பெற் றது எனக் கூறுவதற்கு இல்லை. பெரும்பாலான நீதிபதிகள் தங்களு டைய நிலைப்பாட்டை 10 ஆண்டுகளாக ஆட்சி செய்துவரும் ஜனாதிபதி குச்மா வின் தயவில்தான் பதவியில் இருந்த துடன், அவருடைய ஆட்சிக்கு விசுவாச மிக்க ஆதரவாளர்களாகத் தான் பணி புரிந்துள்ளனர்.

(தொடரும்)

# மோட்டார் வாகன திணைக்கள கட்டணங்களில் திருத்தம்

(கொழும்பு)

வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்காக சாரதி அனு மதிப்பத்திரத்திற்கு விண் ணப்பிப்பவர்களின் எண் ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் எதிர்வரும் காலங்களில் ஓட்டுநர் உரிமம் உள்ளிட்ட அனை த்துக் கட்டணங்களையும் திருத்துவதற்கு மோட்டார் போக்குவரத்து திணைக் களம் அனுமதி கோரியு ள்ளது.

அந்தவகையில் 2009 ஆம் ஆண்டு இறுதியாக திருத்தம் செய்யப்பட்டு 13 வருடங்களின் பின்னர் இந் தக் கட்டணங்களுக்கான திருத்தங்கள் இடம்பெற வுள்ளதோடு இது விரை வில் வர்த்தமானியில் வெளி யிடப்படும் என்று சாரதி அனுமதிப்பத்திர திணை க்கள ஆணையாளர் வசந்த என். ஆரியரத்ன தெரிவித்து ள்ளார்.

இப்பொழுது புதிய ஓட்டு நர் உரிமத்திற்கு ரூ.1. 700 மற்றும் ஓட்டுநர் உரிமம் புதுப்பிக்காததற்கு ஆண் டுக்கு ரூ.250 அபராதம் மட்டுமே அறவிடப்படுகிறது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளர். (நி)


# இராசிபலன்

17.08.2022
ஆவணி 01, புதன்கிழமை
ஷஷ்டி பின்னிரவு 1.15 மணிவரை


அச்சுவினி பின்னிரவு 3.12 மணிவரை
சுபநேரம் 4.35-6.05 மணிவரை
இராகுகாலம் 12.05-1.35 மணிவரை

சந்திராஷ்டமம் - உத்தரம்


வளவன்


மேஷம்


வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், உடல் நலனில் அதிக அக்கறை காட் டுவீர்கள், கனவு பலிதமுண்டு.


கடகம்


குடும்பத்தில் கலகலப் பான சூழ்நிலை உரு வாகும், செய்தொழிலில் முன்னேற்றம் காணும் நாள், ஆன்மிக சிந்தனை மேலோ ங்கும் நாள், ஆரோக்கியமான நாள்.


துலாம்


குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதி கரிக்கும் நாள், பயண ங்கள் கைகூடும் வாய் ப்புண்டு, வழிபாட்டில் ஆர்வம் கூடும், காரிய அனுகூலமுண்டு.


மகரம்


வெளியூர்த் தொடர் புகள் அனுகூலம் தரும், பிறர் நலன் கருதி எடு த்த முயற்சிகள் கைகூடும், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.


ரிஷபம்


சேமிப்பில் சிறிது கரை யலாம், குடும்பத்தினரு டன் குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெற லாம், பக்குவமாகப் பேசி காரியம் சாதி ப்பீர்கள், சயன சுகக் குறைவான நாள்.


சிம்மம்


ஏட்டிக்குப் போட்டியாக இருந்தவர்கள் மனம் மாறுவர், வருங்கால த்திற்கான திட்டமொன் றைத் தீட்டுவீர்கள், வீட்டை சீரமை ப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.


விருச்சிகம்

மனக்குழப்பம் அகலும், பயணங்களால் பலனு ண்டு, இறைவழிபாட் டில் ஆர்வம் கூடும், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், போசன சுகமுண்டு.


கும்பம்


பொல்லாதவர்கள் உங் களை விட்டு விலகலாம், குடும்பப் பொறுப்புகள் கூடும் நாள், முயற்சிக ளில் முத்தான வெற்றி கிடைக்கும், வழிபாட்டால் பெருமை காண்பீர்கள்.


மிதுனம்


எண்ணிய காரியங்கள் எளிதில் நிறைவேறும் நாள், இயல்பான வாழ்க் கையில் இன்பங்கள் கூடும் நாள், போசன சுகமுண்டு, வழி பாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.


கன்னி

குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுக ளில் குறைகண்டு கூறலாம், வாகன பழுதுச் செலவு கள் ஏற்படலாம், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை.


தனுசு

நெடுநாளைய கனவு கள் நனவாகலாம், கேளி க்கை கொண்டாட்டங்க ளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம்.


மீனம்

இறைவழிபாட்டில் ஆர் வம் கூடும், தொழிலை விரிவுபடுத்தும் எண் ணம் உருவாகும், எதிர்பா ராத தனவரவுகள் இல்லம் வந்து சேரலாம், சுபகாரியப் பேச்சுக்கள் முன்னேற்றம் தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் மௌனம் பேசினால் அதற்குத் தகுந்த மரியாதை கொடு.

## இளைஞர்...

என்பவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மரண விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7)

## இலங்கை...

வேற்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் உரையாற்றிய அவர், சீன கப்பல் உளவு பார்ப்பதற்காக அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வருகை தருகிறதாக இந்தியா குற்றம் சுமத்திய போது அது அபத்தமானது என சரத் வீரசேகர தெரிவித்தார்.

அத்தோடு யுவான் வாங் கப்பல் விவகாரத்தில் இந்தியா மற்றும் அமெரிக்காவின் தேவைகளுக்காக இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கையினை மாற்றியமைத்துக் கொள்ள முடியாது.

இந்தியா மற்றும் அமெரிக்காவின் யுத்த கப்பல்கள் இலங்கைக்கு வருகை தரும்போது சீனா ஒருபோதும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை எனக் கூறிய சரத் வீர சேகர, சீனாவின் கப்பல் இந்தியாவை உளவு பார்ப்பதற்கு அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வருகை தர வேண்டிய தேவை கிடையாது என்றும் கூறினார். (ம-7)

## +6 மரணம்...

பட்ட 3 ஆண்களும் 3 பெண்களும் கோவிட்-19 தொற்றினால் உயிரிழந்தனர்.

இதன்படி, இதுவரையில் பதிவான மொத்த கோவிட்-19 மரணங்களின் எண்ணிக்கை 16 ஆயிரத்து 630ஆக அதிகரித்துள்ளது.

மேலும் கோவிட் வைரஸ் தொற்றுக்குள்ளான 195 நோயாளர்கள் நேற்று புதிதாக இனங்காணப்பட்டுள்ளனர்.

இதற்கமைய இலங்கையில் பதிவான மொத்த கோவிட் நோயாளர்களின் எண் ணிக்கை 668,336 ஆக அதிகரித்துள்ளது. (ம-7)

## ஆட்சிக் கவிழ்...

"யுவான் வாங் 5" கப்பலுக்கு உத்தியோகபூர்வ வரவேற்பளிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சீனா எம்முடன் நீண்டகாலமாக நட்புறவைக் கொண்டுள்ளது. நாம் பொருளாதார ரீதியில் விழுந்துள்ள சந்தர்ப்பங்களிலும் எமக்குக் கைகொடுக்கும் நாடுகளில் சீனாவும் ஒன்றாகும்.

நாம் எதனைச் செய்ய வேண்டும் என்று எமக்கு ஒருபோதும் சீனா அழுத்தங்களைப் பிரயோகிக்கவில்லை.

இலங்கையில் தொண்டு நிறுவனங்களை நிறுவி ஆட்சிக் கவிழ்ப்புக்களை மேற்கொள்ள சீனா ஒருபோதும் செயற்பட்டதில்லை.

இலங்கை தற்போது பொருளாதார ரீதியில் நெருக்கடிகளை கொண்டுள்ளது. இந்த நிலைமையில் கடன்களை விட முதலீடுகளையே இலங்கை எதிர்பார்க்கின்றது.

இந்தச் சந்தர்ப்பத்தில் கடன்களை விட முதலீடுகளால் சீனா எமக்கு அதிகம் உதவும் என்று நாம் எதிர்பார்க்கின்றோம்" என விமல் வீரவன்ஸ தெரிவித்தார். (ம-7)

## தீவிர கண்காணி...

வரும் 22ஆம் திகதிவரை அங்கு இருக்கும்.

222 மீற்றர் நீளமும் 26 மீற்றர் அகலமும் கொண்ட யுவான் வாங் 5" உளவு கப்பல் 11 ஆயிரம் தொன் எடை கொண்ட பொருட்களை சுமக்கும் வல்லமை கொண்டது.

கடல் சார் கண்காணிப்பு, விண்வெளி கண்காணிப்பு உட்பட பிரமாண்டமான ராக்கெட்டுகளை ஏவும் வசதியும் இந்த கப்பலில் இருக்கிறது.

எனவே இந்த உளவு கப்பல் சேகரிக் கும் தகவல்கள் அனைத்துமே சீனாவின் இராணுவ புலனாய்வு அமைப்புக்கு அடுத்த நிமிடமே சென்று சேர்ந்து விடும்.

இந்நிலையில் இதுதான் இந்தியாவுக்கு ஏற்படப் போகும் மிகப்பெரிய அச்சுறுத்தல் என்று இந்தியா உறுதியாக கருதுகிறது.

யுவான் வாங் 5 உளவு கப்பல் மூலம் 750 கி.மீ. சுற்றளவுக்கு இருக்கும் ஒவ்வொன்றையும் துல்லியமாக ஆய்வு செய்ய முடியும். அதேசமயம் சீனாவின் தேசிய விண்வெளி ஆய்வு மையத்தால் இந்தக் கப்பல் இயக்கப்பட்டு வருகிறது.

சீனாவிடம் உள்ள மிகப் பெரிய உளவு கப்பல் இந்த யுவான் வாங் 5 கப்பல்தான். இதனால்தான் இந்தக் கப்பலை இந்திய இராணுவம் அச்சுறுத்தலாக கருதுகிறது. இந்தியாவில் எல்லைக்கு மிக மிக அருகில் சீன உளவு கப்பல் நெருங்கி வருவது இதுவே முதல் முறையாகும்.

யுவான் வாங் 5 உளவுக் கப்பலால் தென் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என பல்வேறு தரப்பினர் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

இந்த நிலையில், சீன உளவுக் கப்பல் இலங்கைக்கு வந்ததையொட்டி ராமேஸ்வரம் கடல் பகுதியில் இந்திய கடற்படையினர் ஹெலிகொப்டர் மூலம் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். (ம-7)

## இலங்கை வந்த...

டேவிட் மெக்லாக்லன் - கார் நேற்று இலங்கை வந்தடைந்தார்.

டேவிட் மெக்லாக்லன்-கார் இலங்கையில் தங்கியிருக்கும் காலத்தில் அரசாங்க, எதிர்க் கட்சி, குடியியல் சமூகம், இராஜதந்திர சமூகம் மற்றும் பிறரை சந்திக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன் அவர் எதிர்வரும் நாட்களில் யாழ்ப்பாணம் சென்று அங்குள்ள அரச மற்றும் குடியியல் சமூக குழுக்களை சந்திப்பார்.

இலங்கையில் உள்ள அதிகாரிகளுடனான அவரது கலந்துரையாடல் ஐக்கிய நாடுகளின் நிலையான அபிவிருத்தி ஒத்துழைப்பு கட்டமைப்பு தொடர்பில் அமைந்திருக்கும்.

அத்துடன் அடுத்த ஐந்து ஆண்டுகளில் இலங்கையில் உள்ள அனைத்து ஐக்கிய நாடுகள் முகவர் நிறுவனங்களின் பணிகளையும் வழி நடத்தும் வகையில் அமைந்திருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## அவசர...

நாடு தற்போது ஸ்தீரமான நிலையில் இருக்கின்றது எனச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அவசரகாலச் சட்டத்தை நீடிக்க வேண்டிய தேவை இல்லை எனவும் குறிப்பிட்டார்.

கொழும்பு, சினமன் லேக்சைட் ஹோட்டலில் நேற்று நடைபெற்ற "தொழில் சார் வல்லுநர் சங்கங்களின் மாநாடு - 2022" விருது வழங்கும் நிகழ்வில் உரையாற்றும்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

"தற்போது நாட்டைக் கட்டியெழுப்ப பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கு அனைத்துத் தரப்பினரின் ஒத்துழைப்பும் தேவை" என்றும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (ம-7)

## கொரோனாவால்...

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த 76 வயதுடைய வயோதிபப் பெண்ணே நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்தார்.

கோவிட்-19 நோய்த்தொற்று காரணமாகவே அவர் உயிரிழந்தார் என்று மருத்துவ அறிக்கையிடப்பட்டுள்ளது. (ம-7,33,104)

## தமிழ் மொழி...

ளார்.

இதன்படி அடுத்த ஆண்டு இடம் பெறவுள்ள 75 ஆவது சுதந்திர தின விழாவின்போது தேசிய கீதம் தமிழிலும் பாடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-7)


ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 16/08/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1308
விருச்சிகம் 8 0 8 8 3 0
தேசிய லொத்தர் சபை

கொவிசெத
திகதி 2022.08.16 சீட்டிழுப்பு இலக்கம் 3091
N 01 09 15 48
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 16/08/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1197
U 07 24 26 73 75

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.08.16
சீட்டிழுப்பு இலக்கம் 158
கன்னி 18 30 49 54 கன்னி
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2022/08/16
சீட்டிழுப்பு இலக்கம் 4849
A 7 1 0 9 7 4
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி -2022.08.16
சீட்டிழுப்பு இலக்கம் - 879
A 01 04 15 69

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1824 நிறம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2022.08.16 தினம் செவ்வாய்க்கிழமை
T 28 62 75 76
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,396,660/-

சனிதா
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.08.16
சீட்டிழுப்பு இல : 3985
வர்ணம் : இள நீலம்
ரூ. 3,095,880/-
வெற்றி இலக்கங்கள் 21 36 67 74 O

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 210
சீட்டிழுப்பு திகதி 2022.08.16
செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் 10 19 48
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,924,740/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,895,914.80
திகதி 2022-08-16
வெற்றி வாரம் 3536
வர்ணம் சிவப்பு
வெற்றி இலக்கங்கள் 21 37 53 54
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 7,163,900/-

25
சீட்டிழுப்பு வாரம் 1000
திகதி 2022.08.16 செவ்வாய்க்கிழமை
K 40 09 46 47 50
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 254,006,029/-
தொலைபேசி: 011-2 333 546-47
Web : www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
சீட்டிழுப்பு இல : 1650
வர்ணம் : இள நீலம்
சீட்டிழுப்பு திகதி : 2022.08.16
ரூ. 3,860,520/-
வெற்றி இலக்கங்கள் 44 46 50 61 A


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (12461)

**076 825 7716 (ஆகாஸ்)**

## IELTS வகுப்புகள்

**புதிய பிரிவுகள் 23.08.2022 அன்று ஆரம்பம்**

- 10 வருட கால IELTS அனுபவமுள்ள ஆசிரியர்.
- ஒரு பிரிவில் 5 பேர் மட்டுமே.
- தனிப்பட்ட கவனிப்புகள்.
- 6 புள்ளிகளுக்கு மேல் எடுப்பதற்கான உத்தரவாதம்.
- தனிப்பட்ட நேரத் தெரிவுகள்.
- மிகக் குறைந்த கட்டணங்கள்.

(12455)

**22.08.2022 இற்கு முன்னர் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்**

**WINSTAR CONSULTANTS (PVT) LTD**
**NO.45, VEMPADY STREET, JAFFNA.**
**077 395 0857**

## வேலை வாய்ப்புக்கள்

யாழில் பிரபல 3 Star Hotel ஒன்றிற்கு 30 பணியாளர்கள் உடன் தேவை.

- Room Attendant
- Poter
- Assistant Hotel Manager
- Hotel House Keeper
- Parking Manager
- Maintained Supervisor
- Hotel Receptionist
- Maintained Technician

விண்ணப்பிக்க ஆர்வமுள்ளவர்கள் உங்கள் சுயவிபர கோவையுடன் நேரில் வரவும்.

◆ பதிவுக் கட்டணம் உண்டு. (12452)

**Winstar Consultants (Pvt) Ltd**
**No.45, Vempady Street, Jaffna.**
**071 071 6979**

# இலங்கையின் 80 வீத ஏற்றுமதி பொருட்களுக்கு வரிச்சலுகை வழங்கப்படும்

## பிரித்தானியா தெரிவிப்பு

ஐக்கிய இராச்சியத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய வர்த்தகத் திட்டத்தினால் இலங்கை பயனடையவுள்ளது.

இதனை கொழும்பில் உள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகரகம் தெரிவித்துள்ளது.

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கான ஐக்கிய இராச்சியத்தின் புதிய வர்த்தகத் திட்டம் (DCTS) இலங்கைக்கு பயனளிக்கும் என்றும், பித்தானியாவுக்கான வரியில்லா ஏற்றுமதியின் மூலம் இலங்கையும் தொடர்ந்து பயனடையும் என்றும் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகரகம் நேற்று தெரிவித்துள்ளது.

இதன்கீழ் இலங்கையில் 80 வீத ஏற்றுமதி பொருட்களுக்கு வரிச்சலுகை வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் வளர்ச்சி மற்றும் செழிப்புக்கு உதவும் வகையில் இந்த வர்த்தகத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது என்று பிரித்தானிய சர்வதேச வர்த்தகத் துறையின் வெளியுறவுத்துறை செயலர் கூறியுள்ளார். (ம-7)

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும். (12440)

தொடர்பு: றாஜ் - 077 679 6623

## உடனடி வேலை வாய்ப்புக்கள்

**EXECUTIVE OFFICER**



- சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (திறமைகளுக்கு உட்பட்டது)
- வயது-22 தொடக்கம் 35
- தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)

(C-4749)

**V2 TRAVELS**

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்.

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் | 0777-068-777

## வேலை வாய்ப்பு

உங்கள் தகைமை மற்றும் திறமைகளுக்கேற்ப வாய்ப்புக்களைத் தேடிக் கொள்ளக்கூடிய ஓர் அரிய சந்தர்ப்பம்.

அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட எமது W.E.C நிறுவனமானது புதிய கிளைகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படவுள்ளது. இவ் அரிய வாய்ப்பினை தனதாக்கிக்கொள்ளுங்கள்.

வரவேற்பாளர், முகாமையாளர், உதவி முகாமையாளர், மேற்பார்வையாளர், கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர் போன்ற பதவி வெற்றிடங்கள் பூர்த்தி செய்யப்படவுள்ளன.

- பயிற்சியின்போது 22,500 – 30,000 வரையும்
- பயிற்சியின் பின் 45,000 – 100,000 வரையும் பெற்றுக்கொள்ளமுடியும்.
- தங்குமிட வசதி பெற்றுத்தர முடியும்.
- பயிற்சியின் பின் EPF, ETF, Medical வசதிகளும் உண்டு. (12462)

☎ - 076 940 4151, 077 062 1631

## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

- ONLINE APPLICATIONS
- VISA APPOINTMENTS
- PASSPORT APPLICATION
- POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

(C-4749)




Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்டித்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன். யாழ்ப்பாணம். | V2 TRAVELS

**0777-068-777**

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ 39 வயது செவ்வாய் குற்றமற்ற மணமகனுக்கு மணமகள் தேவை.

(Viber, Whatsapp) (12459)

**077 905 8615**

## தவறிவிட்டது

மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரியைச் சேர்ந்த சு.லிதர்சன் (900xxxx01V) ஆகிய எனது தேசிய அடையாள அட்டை, அலுவலக அடையாள அட்டை மற்றும் வங்கி அட்டை(ATM) என்பன சாவகச்சேரிக்கும் யாழ். நகருக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (12460)

**076 885 3866, 077 323 3999**

## வேலையாள் தேவை

யாழ். நகரிலுள்ள பலசரக்கு கடைக்கு முன் அனுபவம் உள்ள வேலையாள் தேவை.
வயது எல்லை 35 - 50 (12450)

தொடர்பு
**077 112 3542**

## மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 34 வயது நிரம்பிய அரசாங்க சிறு தொழில் புரியும் சூரியன் செவ்வாய் உடைய மணப்பெண் தேவை.
37 வயது நிரம்பிய தனியார் நிறுவனம் ஒன்றில் உயர்பதவி புரியும் இலக்கணத்தில் 2 இல் செவ்வாய்க்கு பொருத்தமான மணப்பெண் தேவை.(யாழ். மாவட்டத்தில் உள்ளவர்கள் மட்டும்) (C-4748)

**077 434 9105**

## அன்பு திருமண சேவை

பதிவு இல. FIN/BR/1139

தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும் ஏற்ற டொக்டர், எஞ்சினியர்,அரச உத்தியோகம் மற்றும் டிவோஸ் மணமகன்/ மணமகள் தேவையெனில் எம்முடன் தொடர்புகொள்ளவும்.
வெளிநாட்டு மணமகன்/ மணமகள் தாராளமாக உள்ளனர். (12451)

**077 844 8942**
யாழ்ப்பாணம்

## Europe Visa

Azerbaijan நாட்டில் 8 மாதகால கல்வியினை மிகக்குறைந்த கட்டணத்தில் மேற்கொள்ள இன்றே பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.
**ஆகக் குறைந்த தகைமை - O/L**
**7 நாட்களில் வீசா பெற்று பயணமாகலாம்.** (12453)

**077 395 0857**

## நிர்வாகக் கிராம அலுவலர் திரு. மு. வ. தவராஜா அவர்களின் செய் பணி ஓம்பி சிறப்புபெய்த வாழ்த்துவமே



**வெண்பா**

காப்பு
சேவை வளம் பூண்டு சேவைபல செய்தோய்ந்து
சேவை தவராசாவை சேவிக்க –சேவை எல்லாம்
தந்து எமை ஆளும் தனியானை முக அரனே
சிந்தை தனில் வந்து செறி

கிழக்கின் ஒளி நீ கிராமத்து தலை மகன் நீ
வழக்கில் தமிழ் ஞான வல்ல அரச ஊழியன் நீ
பழக்கில் இனியவன் நீ பண்பு சார் ஓவியன் நீ
எழுத்தில் புதுமை புரி எம் கலையின் காவலன் நீ

வேண்டி வருவோர்க்கு வினயமுடன் பணியாற்று
பூண்ட பெருமையினால் புதுமை பல கூடி வர
நீண்ட புகழ் கொண்டு நீங்காது எம்மனதில்
காண்ட கனவான்நீ காவியத்து நாயகம் நீ!

குறளுக்குள் அடங்காத குணதர்ம நெறி இல்லை – உன்
திறமைக்குள் அடங்காத சேவை இல்லை செய்பணியின்
பெருமைக்குள் உயர்ந்தவனே பெயர் புவியைச் சமன் செய்த
குறுமுனிக்கு நிகரான கொற்றவன் நீ வாழியவே!

உருவத்தில் சிறுது ஆனால் உட்காரம் மிகப்பெரிது
கருமத்தில் கண்ணியத்தில் கட்டுப்பாடுடன் கூடு
தருமத்தின் நெறி நின்ற தண்ணளிசேர் தக்கோனே
பெருமத்த மதகரி போல் பெருமை கொண்டோய் வாழியவே

கருமமது முடிந்ததென்று கருத்தினிலே கொள்ளாது
பெருமை பெற தமிழ்காத்து பேசு சைவநெறி போற்றி
உருமை பெற எம் இனத்தை உறுதியாய் நிலை நிறுத்த
அருமை உறும் கடன் ஓம்பி அவைபோற்ற வாழியவே



வாழ்த்தி மகிழ்வோர்.
கி...
வடமாராட்சி கிழக்கு பிரதேச செயலகம்

(12464)

## காணி விற்பனைக்கு

**யாழ். நாவற்குழி சந்தியில் 27 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.**

- A9 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்.
- நாவற்குழி சந்தியில் இருந்து 500m தூரத்தில்.
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
- A9 வீதியில் இருந்து 200m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை மூன்று இலட்சம் (300,000/=) மட்டும்.
- இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்.
- யாழ். பஸ் நிலையத்தில் இருந்து 4Km தூரம்.

(12465)

பார்வையிடும் நேரம் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை

**076 490 5403, 076 491 2493, 076 490 6029**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.08.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.